**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.1/2024

Deposition of witness for DW2

| | | |
|---|---|---|
| Name | : | அண்ணாமலை |
| Father's Name | : | சேர்மக்கனி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.02.2026.

<u>முதல் விசாரணை</u>:

1. நான் தற்போது ஆவுடையனூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்துவருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. வட்டாட்சியர் தென்காசி என்னிடம் அழைப்பாணையை கொடுத்து என் சார்பாக ஆஜராக கூறினார். அது ஏற்கத்தக்க காரணமில்லை. வட்டாட்சியர் ஆஜராவதிலிருந்து விலக்களிக்க நீதிமன்றத்தில்இருந்து எழுத்துப்பூர்வமான மனுவும் அளிக்கவில்லை வழக்கை விரைவாக விசாரணை செய்ய வேண்டி சாட்சியை விசாரணை செய்யப்படுகிறது. அரசு வழக்கறிஞருக்கு இதுவே கடைசி முறை என்றும், வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பினால் துணைநிலை வட்டாட்சியர் அளவிற்கு குறையாத அலுவலர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க ஆஜராக வேண்டும். தவறும்பட்சத்தில் சாட்சி பிடியாணை பிறப்பிக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டது.

2. நீதிமன்றத்தில் இருந்து வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை என் வசம் அளித்து, அழைப்பாணையில்கோரிய ஆவணங்களுடன் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன்.

3. அழைப்பாணையின் கோரிய ஆவுடையனூர் கிராம நஞ்சை புல எண்.532/3 பட்டா எண்.684 நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். **பட்டா எண்.684 சா.சா.ஆ.1 ஆக பி.வா.சா.2 முதல்விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.**

4. பட்டா எண்.684 மாறுதல் உத்தரவு அழைப்பாணையில் கோரியதால் வட்டாட்சியர் என்னிடம் அந்த பட்டா மாறுதல் உத்தரவை வழங்கினார், அதை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். **சர்வே எண்.532/3 க்கான பட்டா மாறுதல் உத்தரவு சா.சா.ஆ.2 ஆக பி.வா.சா.2 முதல்விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.**

5. பட்டா எண்.684 வாதிகள் பெயரில் இருப்பதற்கு முன்பு யார்பெயரில் இருந்தது என்றால் வைத்திலிங்க நாடார் மகன் சிவன்நாடார் மற்றும் 4 வாதிகள் பெயரில் கூட்டாக இருந்தது.

6. முறையான சட்டவிதிமுறைக்குஉட்பட்டு பட்டா மாறுதல் உத்தரவு வட்டாட்சியரால் பிறப்பிக்காததால் தவறான ஆவணங்களை வைத்து வட்டாட்சியரை ஏமாற்றி தவறான பட்டாபெற்றுள்ளதால் பட்டாமாறுதல் உத்தரவு செல்லாது என்றும், பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டாவே செல்லும் என்றால் சரியல்ல.

7. பொதுவாக பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கும்போது பழைய பட்டாதாரர் உயிருடன் இருந்தால் அவருக்கு அனுமதியின்றியோ, அழைப்பாணை அனுப்பாமாலோ நீதிமன்ற உத்தரவு இல்லாமலோ மாற்றம் செய்யக்கூடாது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.532/3ன் யூடிஆர் அ பதிவேடு சான்றிட்ட நகல் என்றால் சரிதான். யூடிஆர் அ பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. என்னிடம் காண்பிக்கப்படுவது யூடிஆர் க்கு பிறகு ஏற்பட்ட அசல் பட்டா எண்.684 என்றால் சரிதான். பட்டா 684 வா.சா.ஆ.11 ஆககுறியீடு செய்யப்படுகிறது.

3. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.532/3–க்கான பசலி பதிவேடு என்றால் சரிதான். பசலி பதிவேட்டின் அடங்கல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. என்னிடம் காண்பிக்கப்படுவது பட்டா எண்.684க்கான தீர்வை ரசீது என்றால் சரிதான். தீர்வை ரசீதுகள் (எண்ணம்–10) வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.532/3ன் தற்போதைய இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி பட்டா என்றால் சரிதான்.

இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினிபட்டா வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வாதிகளை விசாரணை செய்யாமல் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்ததால் அந்த பட்டா மாறுதல் உத்தரவு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7. சா.சா.ஆ.2 வாதிகளுக்கு அனுப்பிய விவரம் துலங்காததாலும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது பட்டாமாறுதல் செய்யப்பட்டதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி